திறந்த அணுகல் மற்றும் சகமதிப்பாய்வு இதழ்
MAAYAN INTERNATIONAL JOURNAL OF TAMIL RESEARCH (MIJTR)
Open Access & Peer Reviewed Journal
E-ISSN : 2583-0449

# Worship of Thirumal in Palanthamil Literature

**Dr. Y. Durga Devi**

**Assistant Professor, Department of Tamil, Vels Institute of Science and Technology, Chennai, India**

Manuscript ID : **MT127A0054**

Volume : **2**

Issue : **3**

Month : **September**

Year : **2022**

Received: 16.09.2022
Revised: 19.09.2022
Accepted: 22.09.2022
Published: 30.09.2022

Pages : 82-93

DOI: 10.5281/zenodo.7371828



**ABSTRACT:**

In this review article, Tirumal worship in Palanthamil literature, Vaishnavism and Tirumal worship from the Vedic period, and the fact that it has excelled in this land, the first book of Tamil literature, Sangapadals, Kappiyams and Gupta period inscriptions, charters, coins, mentions about Tirumal are explained in this review article.

**KEYWORDS:**

Vainavam, Thirumal, Mayavan, Kariyavan, Varaka, Narasimma, Kannan, Kirisnan, Vishnu, Karuda paravai, Thiruman kappu

# பழத்தமிழ் இலக்கியங்களில் திருமால் வழிபாடு

**முனைவர் யு. துர்காதேவி,**
*உதவிப்பேராசிரியர்,*
*தமிழ்த்துறை, வேல்ஸ் அறிவியல் தொழில்நுட்ப உயர் ஆராய்ச்சி நிறுவனம்,*
*சென்னை, இந்தியா*

## கட்டுரைச் சுருக்கம்

**பழந்தமிழ் இலக்கியங்களில் திருமால் வழிபாடு என்னும் இத்தலைப்பில் வேத காலம் முதலே வைணவமும், திருமால் வழிபாடும், இம்மண்ணில் சிறந்து விளங்கியுள்ளதையும் தமிழிலக்கியத்தின் முதல் நூலான தொல்காப்பியம், சங்கப்பாடல்கள், காப்பியங்கள் மற்றும் குப்தர்கால கல்வெட்டுகள், சாசனம், நாணயங்களில் வழி திருமால் பற்றிய குறிப்புகள் இவ்வாய்வுக் கட்டுரையில் விளக்கப் பெறுகின்றது.**

## கருச்சொற்கள்

**வைணவம், திருமால், மாயவன், மாயோன், கரியவன், வராக, நரசிம்ம, கண்ணன், கிருஷ்ணன், விஷ்ணு, கருடக் பறவை, திருமண் காப்பு**

## முன்னுரை

வேதகாலத்திலிருந்து இன்றுவரை இந்து சமயத்தில் காலந்தோறும் பல மாற்றங்கள் நிகழ்ந்துவருகின்றன சங்க இலக்கியங்களில் வேதங்கள் பற்றியும், வேள்விகள் பற்றியும் குறிப்புகள் காணப்படுகின்றன. சிவன், முருகன், திருமால், பலராமன் ஆகிய கடவுளைப் பற்றிய குறிப்புகளும், பிற தெய்வங்களைப் பற்றிய குறிப்புகளும் காணப்படுகின்றன. மேலும் சங்க காலத்திற்குப் பின்பு தமிழ்நாட்டில் ஏற்பட்ட ஆட்சி மாற்றங்களால் மக்கள் மனங்களிலும் நடைமுறை வாழ்விலும் பல மாற்றங்கள் தோன்றலாயின. பண்பட்ட நிலையில் வாழ்ந்த தமிழர்கள் வாழ்வில் பிறசமயங்கள் புகுந்தன. அந்நிலையில்தான் சைவ, வைணவ சமயங்கள் மக்களின் வாழ்வியற் சமயங்களாக மாறி மக்களை நெறிப்படுத்தும் பணியினை முனைந்து செய்ய முற்பட்டன. சங்ககாலம் தொட்டே இச்சமயங்கள் தமிழ் மண்ணில் வேரூன்றியிருந்த போதிலும் அவை வளர்ந்து செழிக்கும் வாய்ப்பு ஆழ்வார்களின் வருகைக்குப் பின்னரே உருவாகியது. மேலும் சமயத்தின் அடிக்கருத்தை அறிவதற்கும், தெளிவதற்கும், உணர்வதற்கும் ஆழ்வார்களின் அந்தாதிகள் துணைபுரிகின்றன என்னும் உண்மையை

உணர்கின்றோம். பழத்தமிழ் இலக்கியங்களில் திருமால் வழிபாடு குறித்து ஆராய்ந்து இக்கட்டுரை விளக்கப்பட்டுள்ளன.

## வைணவத்தின் தொன்மை

உலகில் மக்கள் தங்கள் வாழ்க்கையை நெறிப்படுத்தி வாழ்வாங்கு வாழ்ந்து இறைநிலை அடைய சமயங்கள் சரியான வழிகளைக் காட்டுகின்றன. இவற்றில் தத்துவம், இலக்கியம் ஆகியவற்றால் இந்து சமயம் சிறப்புடையதாய் விளங்குகின்றன. இவற்றில் சைவமும், வைணவமும் அதன் இரண்டு கண்களாக விளங்குகின்றது. இத்தகைய சமயங்கள் வேதகாலம் தொட்டு இம்மண்ணில் தோன்றி வளர்ந்து வந்துள்ளன.

வைணவ சமயத்தில் திருமால் வழிபாடு மிகவும் தொன்மையானதாக கருதப்படுகிறது. **"திருமால் மூத்த முழுமுதற் கடவுளாகவும், பிற தெய்வங்கள், உயிருள்ள, உயிரற்ற, உலகப் பொருள்கள், அண்டங்கள், கோள்கள், விண்மீன்கள், ஆகிய அனைத்தையும் தோற்றுவித்தவனாகவும் இருக்க வேண்டும்."**[1] எனத் திருமால் வழிபாடு என்னும் நூலில் கூறப்பட்டுள்ளது. மேலும் நான்முகன் படைத்தல் தொழிலையும், திருமால் காத்தல் தொழிலையும், சிவன் அழித்தல் தொழிலையும் செய்கின்றனர் எனப் புராணங்கள் கூறுகின்றன.

## வேதங்களில் திருமால்

வேதத்தைப் பிரமாணமாக ஒப்புக் கொள்ளும் மதம் இந்து மதமாகும். இந்துமத நூல்களில் மூத்தவை இருக்கு, யசுர், சாம, அதரண, வேதங்களாகும். இவை துவாபர யுகத்தில் 'வியாச மகரிஷியால்' நூறாயிரம் சாகைகள் எனப்படும் அத்யாயங்களுள் ஒன்றாக இருந்த வேதம், நான்கு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டதாகவும், அந்தப் பிரிவுகளே இருக்கு, யசுர், சாம, அதர்வண வேதம் என்றழைக்கப் படுவதாகக் கூறப்படுகிறது. இதில் இருக்கு வேதம் மிகப் பழமையானதாக அறிஞர்களால் கருதப்படுகிறது.

இந்துக்கள் பல பிரிவினரும் வேதத்தை பிரமாண நூற்களாகக் கொள்வர். வேதங்களில் குறிப்பிடப்படும் பரம்பொருள் 'திருமாலே' என்பது அவர்கள் நம்பிக்கை. மேலும், ஆழ்வார் பாடல்களிலும் இந்நம்பிக்கையின் எதிரொலியினைக் காணமுடிகிறது. நாராயணனான திருமாலே முழுமுதற் கடவுள்; அவனே வேதப் பொருளாக விளங்குகின்றான் என்பதைத் திருமங்கையாழ்வார்,

**"வேத முதல்வன் விளங்கு புரிநூலன்"** **(நா.தி.பி.**1679)

என்று தம் பாசுரத்தில் பாடியுள்ளார்.

இருக்கு வேதகத்தில் **"எவராலும் வெல்ல முடியாத எல்லோரையும். எல்லாவற்றையும் காக்கிற பகவானான விஷ்ணு, மூன்று உலகங்களையும் அளந்து அதன் மூலம் அறத்தை நிலை நிறுத்தினான் என்று சொல்லப்படுகிறது."**[2] எனவே, விஷ்ணுவாகிய திருமால் இவ்வுலக மக்களைக் காத்தும் துன்பத்திலிருந்து விடுவித்தும் நன்மைகள் பல புரிந்துவந்தார் என வேதங்கள் கூறுகின்றன. ஆகவே, வேதகாலம் முதலே திருமால் பற்றிய குறிப்புகள் நமக்குக் கிடைத்துள்ளன.

### (i). தொல்காப்பியத்தில் திருமால் வழிபாடு

தமிழ் நூல்களில் காலத்தால் சாலப் பழமைவாய்ந்த தொல்காப்பியத்திலும், அதனையொட்டித் தோன்றிய சங்க இலக்கியம், காப்பியங்களிலும் கூட திருமால் வழிபாடு பற்றியக் குறிப்புகள், ஆங்காங்கே காணமுடிகிறது. தமிழர்கள் தங்கள் நாட்டின் இயற்கைக்கு ஏற்றவாறு நிலங்களையும் அவற்றிற்குரிய தெய்வங்களை வைத்துக் கூறுமிடத்து,

**"மாயோன் மேய காடுறை உலகமும்**
**சேயோன் மேய மைவரை உலகமும்**
**வேத்தன் மேய தீம்புனல் உலகமும்**
**வருணன் மேய பெருமணல் உலகமும்**
**முல்லை குறிஞ்சி மருதம் நெய்தல்**
**எனச் சொல்லிய முதையால் சொல்லவும் படுமே"** (**தொல்.அகத்**.5)

எனத் தொல்காப்பியம் உரைக்கிறது. இத்தெய்வ வழிபாடுகள் தொல்காப்பியர் காலத்திற்கு முற்பட்ட காலத்திலேயே தமிழ் மக்களால் விரும்பி மேற்கொள்ளப்பட்டுள்ளன. ஈண்டு மாயோனை முல்லைக்குரிய தெய்வமாக முதலில் வைத்து எண்ணப்படுவது நோக்கத்தக்கது. திருமால் முழுமுதற் கடவுள் என்ற உணர்வு அவர்களுக்கிருந்தமையால் முதலில் திருமாலைக் குறிப்பிட்டுள்ளனர். "அகத்திணை யொழுக்கம் தொடங்குதற்கிடமான குறிஞ்சியை, ஏனையப் புலவர் போலத் தாமும் முதலில் வைத்துக் கூறாது. திருமாலுக்குரிய முல்லையை முதலாகக் கொண்டு தொல்காப்பியர் எண்ணுதல் ஒரு சிறப்பியல்பு பற்றியது என்றே கருதத்தகும்" என்ற கருத்தும் சிந்தித்தற்குரியது.

முல்லை நிலத்தவர், வணங்கி வந்த மாயோனை முற்படக் கூறியதால் முல்லை நிலமும் அதன் தெய்வமும் சிறப்புப் பெற்றிருந்தது புலனாகிறது. ஐந்திணை ஐம்பது இயற்றிய மாறன் பொறையனாரும் **"மல்லர்க் கடந்தா நிறம் போன்றிருண்டெழுந்து"** (**ஐந்.ஐம்**:1) எனத் திருமாலை முதலில் கூறி, முல்லை திணையைத் தொடங்குதலைக் காண முடிகிறது.

தொல்காப்பியர் காலத்தில் மாயோனை மன்னனுக்கு ஒப்பாகக் கூறி வந்தனர். காக்கும் தொழிலைச் செய்யும் திருமாலுடன் மக்களைக் காக்கும் மன்னனை ஒப்பாகக் கூறியுள்ளனர் என்பதனை,

**"மாயோனை மேஎய மண்பெருஞ் சிறப்பின்"** **(தொல்.புறத்**:5)

என்ற புறத்திணை செய்தி வழி அறியப்படுகிறது. **"மாயோன் என்பது கரியவன் என்று பொருள் கூறப்படுகிறது."**[3] எனவே, நிறத்தைக் கொண்டு நிலத் தெய்வங்களைக் குறிப்பிட்டிருந்தனர் பழந்தமிழர் என்று அறியமுடிகிறது.

மாயோன் என்ற பெயரால் நம்முடைய முன்னோர்கள் திருமாலைக் குறிப்பிட்டிருந்தனர். காரணம் மாநிறம் உடையவர் என்பது மாயன் (மாயவன்), மாயோன், என்னும் சொற்களுக்குரிய பொருளாகும். மாநிறம் என்பது கரிய நிறத்தைக் குறிப்பிடுகிறது. இதனால் திருமாலைக் கரிய நிறக் கடவுளாகப் பண்டையத் தமிழர் கருதி வந்துள்ளார்கள் என அறியமுடிகிறது. **"மா என்பதற்குப் பொருள் கூறுங்கால், செல்வம், கருநிறம், சுமலை என்று செல்வத்திற்கும், கமலைக்கும் இடையில் திருமாலுக்குரிய கருநிறம் சொல்லப்படுகிறது."**[4]

மேலும் மாயோன், மாயவன் என்பது திருமாலைக் குறிக்கிறது. எனவே. திருமால் வழிபாடு பற்றியச் செய்திகள் தொல்காப்பியம் முதற்கொண்டே அறியமுடிகிறது.

## சங்க இலக்கியங்களில் திருமால்

சங்க இலக்கியங்களான பத்துப்பாட்டு, எட்டுத்தொகை முதலான நூல்களில் திருமாலின் இயல்புகள் எடுத்துரைக்கப்பட்டுள்ளன. சங்க காலத்தில் திருமால் வழிபாடு சிறந்து விளங்கியுள்ளது என்பதற்குச் சங்கப் பாடல்களிலிருந்து சில சான்றுகள்,

கண்ணனும் கோபிகைப் பெண்களும் யமுனை ஆற்றங்கரையில் நீராடி விளையாடியதைப் பற்றி அகநானூறு.

**"வண்புனல் தொழுநை வார்மணல் அகன்துறை,**
**அண்டர் மகளிர் தண்டழை உயர்இயர்**
**மரம்செல மிதித்த மாஅல் போல"** **(அகம்**:59)

என்ற பாடலடிகள் விளக்குகிறது. நீல நிறத்தை உடையவனும் சக்கரப்படையைக் கையில் ஏந்தியவனுமாகிய கண்ணபெருமான் எனச் சொல்லப்படும் கடவுள் இவர் என்பதை.

**"நீனிற வுருவின் நேமியோன், என்று**
**இரு பெருந் தெய்வமும் உடன் நின்றாஅங்கு"** **(புறம்**:58)

எனவும் ஊழி முடிவில் உலகையெல்லாம் உண்டு ஆலிலையில் அமர்ந்ததைப்பற்றி

**"ஆலமர் கடவுள் அன்ன நின்செல்வம்,"** (புறம்:198)

என்ற புறநானூற்றுப் பாடலடிகள் மூலம் அறியமுடிகின்றது. திருமாலே வேதங்களைத் தோற்றுவித்த வேத முதல்வன் என்பதை,

**"வேதமுதல்வன் என்ப"** (நற்.க.செ)

என்றும்,

**"மாயோன் அன்ன மால்வரைக் கவா அன்"** (நற்:32)

என்ற நற்றிணைப் பாடலடியில், திருமால் பெரிய மலைக் குரியவன் என்று தோழி கூறுகின்றாள். எனவே, சங்ககால மக்கள் இறைவழிபாட்டை தங்களின் சூழலுக்கு ஏற்றவாறு அமைத்துக் கொண்டுள்ளனர் என்றும், திருமாலின் பெருமைகள், நிறங்கள் போன்றவை அக்காலக் கட்டத்தில் சிறப்பாகப் போற்றப்பட்டுள்ளன என்று இவற்றின் மூலம் அறியமுடிகின்றது.

## பரிபாடலில் வைணவம்

சங்க இலக்கியத்தில் எட்டுத்தொகை நூல்களுள் ஐந்தாவதாகக் கருதப்படும் பரிபாடலில் திருமாலின் வராசு, நரசிம்ம அவதாரங்களைப் பற்றிய குறிப்புகள் இடம் பெற்றிருக்கக் காணலாம். திருமாலின் வியூக நிலையைப் பாஞ்சராத்திர ஆகமம் விளக்குகிறது. கடுவன் இளவெயினனார் இயற்றியுள்ள மூன்றாவது பாடலில் பாஞ்சராத்திர ஆகமத்தில் குறிப்பிடப்பட்டுள்ள இறைவனின் நால்வகை வெளிப்பாடுகளான வாசுதேவன், சங்கருடணன், பிரத்யும்நன், அநிருத்தன் முதலான பெயர்கள் தமிழ் வடிவில் இடம் பெற்றிருக்கக் காணலாம்.

**"செங்கட்காரி கருங்கண் வெள்ளை**
**பொன்கட் பச்சை பைங்கண் மாஅல்"** (பரி -3:81-82)

என்ற இப்பாடலில் செங்கட்காரி என்பது வாசுதேவன், கருங்கண் வெள்ளை என்பது பலராமன், பொன்கட் பச்சை என்பது பிரத்யும்நன், பைங்கண் மாஅல் என்பது அநிருத்தன் ஆகும். இந்நால்வரும் உறவினர்களாவர். இவர்கள் விருஷ்ணி குலத்தைச் சார்ந்தவர்கள் என்பது வரலாற்று மரபாகும். இவ்வினத்தில் கண்ணனுடைய பிள்ளையான சாம்பனை இணைத்து, இப்பஞ்ச வீரர்களைத் தம் குலத்துத்

தலைவர்களாகக் கொண்டு வழிபட்டுவந்தனர். தமிழகத்தில் குறிப்பாகப் பல்லவர் காலத்தில் இப்பஞ்சவீரர் வழிபாடு மேலோங்கி இருந்தது என்பதற்குச் சென்னை பார்த்தசாரதி கோவில் மற்றும் கும்பகோணம் அருகிலுள்ள நாச்சியார் கோவில் ஆகிய இரண்டையும் சான்றாகக் கூறலாம்.

தமிழகத்தில் வைணவ சமய ஆகமத்தின் தொடக்கம், பரிபாடல் காலத்திலேயே தொடங்கிவிட்டன என்று கூற முடியும். **"இறைவனின் ஐவகை நிலங்களைப் பற்றியக் குறிப்பும் பரிபாடலில் கிடைக்கின்றது.** 1. **பரம்,** 2. **வியூகம்,** 3. **விபவம்,** 4. **அந்தர்யாமித்துவம்,** 5. **அர்ச்சை ஆகிய ஐவகை நிலைகளைப் பற்றி பரிபாடல் அடிகள் எடுத்துரைக்கின்றன"**

1. **பரத்வம்:**

**"நாறு இணர்த் துழாயோன் நல்கின் அல்லதை**
**ஏறுதல் எனிதோ வீடுபேறு துறக்கம்"** (பரி.15. 16-17)

2. **வியூகமும், விபவமும்:**

**"செங்கட்காரி! கருங்கண் வெள்ளை**
**பொங்கட்பச்சை! பைங்கண் மாஅல்"** (பரி.3. 81-82)

3. **அந்தர்யாமி:**

**"தீயுனுள் தென்றல் தீ பூவினுள் நாத்தம் நீ**
**கல்லினுன் மணியும் நீ"** (பரி.3, 63-64)

பரிபாடலில் விஷ்ணு, நாராயணன், கிருஷ்ணன் ஆகிய உருவங்கள் ஒன்றாக இணைத்தே பேசப்படுகின்றன. ஐவகை நிலைகள் ஏற்பட்டவுடன் திருமாலின் அவதாரக் கருத்துகள் தமிழகத்தில் செல்வாக்குப் பெற்றன. எனவே, தமிழக வைணவம் பரிபாடல் காலத்திலேயே உச்சநிலை எய்தி இருந்தன என இதன்மூலம் அறியமுடிகிறது.

## சங்க மருவிய காலத்தில் திருமால் வழிபாடு

சங்க மருவிய காலத்தில் இந்து மதத்துடன் பௌத்த சமண மதங்களும் போட்டியிட்டு வளர்த்துள்ளன. எனவே சமணர்களும் பல நூல்களை இயற்றியுள்ளனர். எனினும் இந்து மதத்தின் பெரும் பிரிவான வைணவமும், திருமால் வழிபாடும், சங்க மருவிய காலத்திலும் சிறந்து விளங்கியுள்ளது என்பதை பதிணென்கீழ்க்கணக்கு நூல்களான திருக்குறள், திரிகடுகம், நான்மணிக்கடிகை, கார் நாற்பது முதலான நூல்களின் மூலம் நாம் அறியமுடிகின்றது.

எச்சமயத்தவர் என்று முடிவுகாண முடியாதவாறு எல்லாச் சமயத்தவரது சிறந்த கருத்துகளையும் கூறிய பெருமைக்குரியவர் திருவள்ளுவர், அவர் தம் குறளில் ஓங்கி உலகளந்த திருமாலைப் பற்றிக் கூறியுள்ளார். தலைவியிடம் அனுபவிக்கும் இன்பத்தை விளக்கவந்த வள்ளுவர்,

**“தாம்வீழ்வார் மென்றோள் துயிலின் இனிதுகொல்**
**தாமரைக் கண்ணான் உலகு”** **(குறள்**:1103)

என்ற அடியில் தாமரைக் கண்ணனின் உலகம். தாம் விரும்பும் காதலியின் மெல்லிய தோள்களில் துயிலும் துயில்போல் இனிமையுடையது என்கிறார் வள்ளுவர். திரிகடுகத்தில், ஆயர்பாடியில் கண்ணன் செய்த பிள்ளைச் செயல்கள் பற்றியச் செய்திகள் இடம்பெற்றுள்ளன. இதனை,

**“கண்ணகல் ஞாலம் அளந்ததூம் காமருசீர்த்**
**தண்ணரும் பூங்குருத்தம் பாய்ந்ததும் - நண்ணிய**
**மாயச் சகடம் உதைத்ததூம் இம்மூன்றும்**
**பூவைப் பூவண்ணன் அடி”** **(திரி.கா.செய்**:1)

என்ற பாடல் மூலம் அறிய முடிகிறது. மேலும் என்ற நான்மணிக்கடிகையில் கண்ணன் செயல்கள் பற்றி,

**“படியை மடியகத்திட்டான் அடியினால்**
**முக்காற் கடந்தான் முழுநில மக்காலத்**(து)
**ஆய்பலி தாங்கிய குன்றெடுத்தான் சோவின்**
**அருமை யழித்த மகன்”** **(நான்.க**:2)

என்ற வரிகளில் முன்றடிகளால் உலகத்தை அளந்ததும், இந்திரனின் சூழ்ச்சியால் பெய்த பெருமழையினின்று மக்களைக் காப்பாற்ற கோவர்த்தன மலையைக் குடையாகப் பிடித்ததும், பாணாசுரனுடைய கோட்டையை அழித்ததுமான செயல்களைப் பற்றி ஆசிரியர் குறிப்பிட்டுள்ளார்.

ஐந்திணை ஐம்பதில் கண்ணனின் நிறம் உவமையாகக் கூறப்படுகிறது. வானத்தில் தோன்றிய கருமேகங்களைக் கண்டு காதலியின் ஏக்கத்தைப் பாடவிழைந்த ஆசிரியர் திருமாவின் நிறத்தோடு ஒப்பிட்டு

**“மல்லலச் கடத்தான் நிறம் போன்றிருண்டெழுந்து”** **(ஐதி. ஐம்**:1)

என்ற பாடலடியில் மல்லர்களை வென்ற செய்தி சுட்டிக் காட்டப்படுகிறது. எனவே, சங்கப் புலவர்களைப் போன்றே, சங்க மருவிய காலத்தில் இருந்த புலவர்களும்

திருமால் மீது பற்றுக் கொண்டவராக இருந்துள்ளனர். எனவே கண்ணனின் உலகம் காதலியுடன் ஒப்பிட்டுக் காண்பதும், அவனின் சிறுபிள்ளை விளையாட்டுச் செயல்களையும், திருமால் மூன்றடியால் உலகத்தை அளந்ததையும், மேகங்களைத் 'திருமாலின் நிறந்தோடு ஒப்பிட்டுக் காண்பதன் மூலம் அக்காலத்தில் வைணவத்திற்கு இருந்த செல்வாக்கும்' திருமாலின் பெருமைகளும் புலப்படுகின்றன.

## பண்டையக் காப்பியங்களில் திருமால்

தமிழ்ச் சங்க நூல்களில் மட்டுமின்றி, சமண, பௌத்த, நூல்களான சிலப்பதிகாரம், மணிமேகலையிலும் திருமால் பற்றியச் செய்திகள் இடம்பெற்றுள்ளன. சிலப்பதிகாரத்தில்,

**"கன்று குனிலாக்கணி உதிர்த்த மாயவன்**
**இன்று தம்மானுள் வருமேல் அவன் வாயிற்**
**கொன்றையத் தீங்குழல் கேளாமோ தோழி!"** (சிலப்.ஆ.கு:264)

என்ற அடிகள் திருமால் குழலூதும் அழகை எடுத்துரைப்பதாக அமைந்திருக்கிறது. மேலும் வாசுகி என்னும் பாம்பைக் கயிறாகக் கொண்டு பாற்கடல் கடைந்தவன் என்பதை,

**"பாம்புகவிதாகக்கடைந்த மாயவன்**
**மக்கு நம்மானு வருமேல் அவன் வாயில்**
**ஆம்பலத் தீங்குழல் கேளாமோ தோழி"** (சிலப்.ஆ.கு: 264)

என்ற அடிகள் விளக்குகின்றன.

திருமால் பற்றிய புராணக் கதைகளைக் கூறும் முதல் காப்பியமான சிலம்பு, திருமால் திருவரங்கத்திலும், திருவேங்கடமலையிலும், பரம்பொருளாக விளங்கும் தன்மையை எடுத்துரைப்பதாக,

**"விரிதிரைக் காவிரி கவின்பெருந் துருத்தித்**
**திருமவர் மார்பன் கிடந்த வண்ணமும்"** (சிலம்.கா:35-40)

**"பொலம்பூ வாடையிற் பொலிந்து தோன்றிய**
**செங்கண் நெடியோ நின்ற வண்ணமும்"** (சிலப்.கா:290)

என்ற அடிகளில் திருவரங்கத்தில் திருமால் கிடந்த வண்ணமாகவும், திருப்பதியில் நின்ற வண்ணமாகவும் காட்சியளிக்கும் நிலையினை எடுத்துரைக்கின்றன.

சிலப்பதிகாரத்தில், விருப்பு, வெறுப்பற்று பிற சமயங்களும், சமயக் கடவுளும், தொன்மக் கூறுகளும் சிறப்பாக எடுத்துரைக்கப்பட்டுள்ளன. பிற சமயத்தினரும், வைணவ சமயம் மீது ஈடுபாடு கொண்டுள்ளனர் என்று எண்ணக்கூடியதாக திருமால் செயல்களும், அவருடைய பெருமைகள் பற்றிப் பாடியிருத்தல் நோக்கத்தக்கதாகும்.

சிலப்பதிகாரம், மணிமேகலை இரண்டையும் இரட்டைக் காப்பியம் என்பார்கள். சிலப்பதிகாரத்தோடு எழுந்த காப்பியம் மணிமேகலை. இது பௌத்த சமயக் காப்பியம் எனப் பெயர் பெற்றது. பௌத்த சமயத்தினரிடமும், திருமால் வழிபாடு செல்வாக்குப் பெற்றிருந்ததை அறிய முடிகிறது. மணிமேகலையில் கிருஷ்ணன் பலராமனோடும், நப்பின்னையோடும் ஆடிய குரவைகூத்துப் பற்றியச் செய்திகள் இடம்பெற்றுள்ளது.

**"மாமணி வண்ணனுந் தல்முனும் பிஞ்சையும்**
**ஆடிய குரவை இஃது அமெனா."** **(மணி.கா:19, 65-66)**

என்ற பாடலடிகள் குரவைக் கூத்து ஆடியதைச் சுட்டுகின்றது. சமயக் கணக்கர் தந்திரம் கேட்ட காதையுள் வைணவம் பற்றிக் கூறப்படுவதால், வைணவ சமயத்தின் முதன்மை அறியப்படுகிறது என்பதை,

**"காதல் கொண்டு கடல் வண்ணன் புராணம்**
**ஓதின னாரணன் காப்பென உரைத்தனன்"** **(மணி.கா:27, 94-95)**

என்ற பாடலடிகள் விளக்குகிறது.

ஆழ்வார் பாசுரங்களின் மூலம் கி.பி. 7ஆம் நூற்றாண்டிலிருந்து கி.பி. 9ஆம் நூற்றாண்டு வரையில் தென் தமிழ்நாட்டில் திருமால் வழிப்பாட்டின் மூலம் பக்தி நிலை மேலோங்கிக் காணப்பட்டது. மேலும் **"ஆழ்வார்கள் காட்டிய சரணாகதித் தத்துவமே மக்களைப் பக்தி நெறியில் ஈடுபடச் செய்தது என்பர்"** இதன் மூலம், திருமால் வைணவச்சமயக் கடவுளான விஷ்ணுவாக, உயர்த்தப்பட்டான் என்பது குறிப்பிடத்தக்கச் செய்தியாகும்.

## குப்தர்கள் காலம் வைணவத்தின் பொற்காலம்

### அ. கல்வெட்டுகள்

**"வட இந்தியாவில் வைணவம் சிறந்து விளங்கியது என்பதை வைணவத்தின் தோற்றமும் வளர்ச்சியும்" என்னும் நூலில் கூறப்பட்டுள்ளது. இதற்கு குப்தர்கள் காலக் கல்வெட்டுகள், நாணயங்கள், செப்பேடுகள் ஆதாரங்களாக உள்ளன. எனவே தான் "குப்தர்கள் காலம் இந்தியாவின் பொற்காலம் மட்டுமல்லாமல் வைணவத்தின் பொற்காலம் என்றும் அழைக்கப்பெறுகிறது."**[5]

மேலும் இந்நூலில் கார்த்திகை மாதம் முழுநிலவு நாளில் திருமாலுக்குக் கொண்டாடப்பட்ட விழாவினைப் பற்றியும் வைணவக் கோயில்கள் சிலவற்றின் பெருமையை பற்றியும் குப்தர்கள் காலக் கல்வெட்டுகள் கூறுகின்றன.

**"கி.பி.இரண்டாம் நூற்றாண்டைச் சார்ந்த பெஸ் நகர் கல்வெட்டு, வைணவ வரலாற்றில் ஏற்பட்ட சில திருப்பு முனைகளைப் பற்றியும் வைணவ தெய்வ வழிபாட்டு முறைகளைப் பற்றியும் குறிப்பிடுகிறது"**[6]

### ஆ. சாசனம்

**"தாளந்தாவில் கண்டெடுக்கப்பட்ட முத்திரை ஒன்றில் கருடப் பறவையின் நெற்றியில் வைணவர்களது சமயக் குறியான திருமன் திட்டப்பட்டுள்ளது என்ற செய்தி காணப்படுகிறது."**[7]

### இ. நாணயங்கள்

குப்தர்கள் காலத்தில் நாணயங்கள் சிலவற்றின் மேல் வைணவக் குறியீடுகள் விரிவாகக் காணப்படுகின்றன. வைணவர் கோயில்களின் பெருமையும் சிறப்பும் கூறப்பட்டுள்ளன. முதலாம் நூற்றாண்டின் முற்பகுதியைச் சார்ந்த 'பாஞ்சால வரிசைகள்' எனப்படும் நாணயங்களுள் விஷ்ணு மித்திரன் வெளியிட்ட நாணயம் ஒன்றில் விஷ்ணுவின் உருவம் பொறிக்கப்பட்டுள்ளது. இதுவே விஷ்ணுவின் முத்திரை பொறிக்கப்பட்ட முதல் நாணயம் என்று குறிக்கப்படுகிறது.

**"குப்தர்கள் காலத்தில் வெளியிடப்பட்ட நாணயங்களில் திருமால் உருவங்கள் மட்டுமின்றி, அவரது வாகனமான 'கருடனும்' வைணவச் சின்னமான 'திருமண் காப்பும்' பொறிக்கப்பட்டிருந்தன. சமுத்திர குப்தர் வெளியிட்ட நாணயங்களில் 'கருடக்கொடி' பொறிக்கப்பட்டுள்ளது. அவருக்குப் பின் பட்டத்திற்கு வந்த பல அரசர்களின் நாணயங்களில் பரம பாகவதர்கள் (சிறந்த திருமால் அடியார்கள்) என்று பொறிக்கப்பட்டுள்ளது"**[8] என்று வைணவத்தின் தோற்றமும் வளர்ச்சியும் என்னும் நூலில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## முடிவுரை

உலகில் மக்கள் தங்கள் வாழ்க்கையை நெறிப்படுத்த வாழ்வாங்கு வாழ்ந்து இறைநிலை அடையச் சமயங்கள் சரியான வழிகளைக் காட்டுகின்றன. சமயப் பண்பாடுகளில் மிகப் பழமை வாய்ந்த நம் நாட்டில், தொன்று தொட்டு வரும் வைதிக சமயங்களில் வைணவ சமயம் ஒன்றாகும். இதற்கு வேதங்களும் இதிகாச புராணங்களும் சிறந்த சான்று நூல்களாகக் கொள்ளப்பட்டு வருகின்றன.

## தொகுப்புரை

வேத காலத்திற்கு முற்பட்டதாகவே மாயோன் வழிபாடு உருவாகியிருக்கிறது என்று கருதப்பட்டு வருகிறது. தமிழிலக்கியத்தின் முதல் நூலான தொல்காப்பியத்தில் முல்லை நிலத் தெய்வமாக, மாயோன் என்று 'திருமால்' குறிப்பிடப்பட்டான். எனவே, தொல் காப்பியக் காலத்திற்கு முன்பே திருமால் வழிபாடு இருந்திருக்க வேண்டும் என்று அறிய முடிகிறது. மாயோன் என்பதும் திருமால் என்பதும் ஒரே பெயரைக் குறிப்பவை என்பது தெளிவாக்கப்பட்டுள்ளது.

சங்க இலக்கியங்கள் சமயச் சார்பற்றவை. சங்க நூல்களில் கிடைத்துள்ள திருமால் பற்றிய குறிப்புகள் சிறப்பாகப் பேசப்பட்டு வந்திருக்கின்றன. திருமாலின் நிறம், பெயர், திருவிளையாடல்கள் ஆகிய செய்திகள் பற்றிச் சங்கப் புலவர்கள் அறிந்திருக்கின்றனர். அச்செய்திகளை உவமைகளாகப் பயன்படுத்தியிருகின்றனர். தமிழ் இலக்கியங்களில் மட்டுமின்றி, சமண பௌத்த இலக்கியங்களான சிலப்பதிகாரம், மணிமேகலை, சீவக சிந்தாமணி முதலியவற்றில் திருமால் பற்றிய குறிப்புகள் இடம் பெற்றுள்ளன.

## அடிக்குறிப்புகள்

1. ஏ. பரந்தாமன்., தொண்டை மண்டலக் கல்வெட்டுகளில் திருமால் வழிபாடு, ப.1.
2. தே.ந.ச. தேவராஜன்., வைணவமும் ஆழ்வார்களும், ப.2.
3. வாழ்வியற் களஞ்சியம், ப.254.
4. உ.வே.சாமிநாதையர். சங்கத்தமிழும் பிற்காலத் தமிழும், ப.57.
5. வீரா ஜெயஸ்வால். வைணவத்தின் தோற்றமும் வளர்ச்சியும், ப.308.
6. மேற்படி, ப.34.
7. மேற்படி, ப.238.
8. மேற்படி, ப.36.

## துணைநூற்பட்டியல்


1. பரந்தாமன், ஏ. தொண்டை மண்டலக் கல்வெட்டுகளில் திருமால் வழிபாடு சென்னை: ஜெம் ஆப்செட்ஸ், 2004.
2. தேவராஜன், வைணவமும் ஆழ்வார்களும் ஸ்ரீ செண்பகா பதிப்பகம், சென்னை: இ.ப -2009.
3. சாமிநாதையர், உ.வே. சங்கத் தமிழும் பிற்காலத் தமிழும் சென்னை: உ.வே.சா.நூல்நிலையம், 2013.
4. சுவீரா ஜெயஸ்வால்,வைணவத்தின் தோற்றமும் வளர்ச்சியும் சென்னை: நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், இ.ப.2010.

## REFERENCES


1. Barandaman, A. Tirumal Worship in Thontai Mandala Inscriptions Chennai: Gem Offsets, 2004.
2. Devarajan, Vaishnavism and Alvars, Chennai: Sri Senpaha Publishing House, 2009.
3. Saminathayar, U.V. Sangat Tamil and Later Tamil, Chennai: U.V.Sa Library, 2013.
4. Suveera Jayaswal, Origin and Development of Vaishnavism Chennai: New Century Book House, AD 2010.